**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 282/2008 |
| | | P/W's | : | 2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | S.Murugesan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> **26-06-2019**

51. தற்போதைய சர்வே எண்.334/08ல் கண்ட சொத்து எங்களுக்கு பாத்தியமானது என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்?

சரியல்ல.

52. சர்வே எண்.334/6ல் உள்ள 1 ஏக்கர் 89 செண்டில் வடபுறத்தில் 79 செண்ட் நீக்கி தென்புறம் 1 ஏக்கர் 10 செண்ட் நிலத்தை நானும், ஞானவேல், செந்தில்வேல், சக்திவேல், மருதாயி அம்மாள், பாலசுப்பிரமணி, காசிலிங்கம், நந்தகோபாலன் ஆகியோர்களுடன் சேர்ந்து சத்தியநாராயணன் என்பவருக்கு 13.03.1995ல் கிரையம் செய்து கொடுத்தோம் என்றால்?

சரிதான்.

53. என்னிடம் காட்டப்படும் 13.03.1995ம் தேதியிட்டு சத்தியநாராயணன் என்பவருக்கு நாங்கள் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் இது தான் என்றால்?

சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும்.

54. மேற்படி பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் வா.சா.ஆ,5 பரிவர்த்தனை பத்திரம் பற்றிய விபரம் காட்டப்பட்டுள்ளது என்றால்?
சரிதான்.

55. பி.வா.சா.ஆ,1 13.03.1995ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பட்டா எண்.1227 யார் யார் பெயரில் இருந்தது?
மேற்படி கிரையம் எழுதி கொடுத்தவர்கள் அனைவர் பெயரிலும் மேற்படி பட்டா இருந்தது.

56. மேற்படி 1227 பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்?
தாக்கல் செய்துள்ளோம்.

57. பட்டா எண்.1227யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்?
சரியல்ல.

58. சர்வே எண்.334/6 1 ஏக்கர் 89 செண்டில் கீழ்புறம் செண்டு 98ல் கீழ்புறம் செண்ட் 62யை பொறுத்து நான் பாலசுப்பிரமணி, காசிலிங்கம், நந்தகோபால், தனலட்சுமி, மஞ்சுளா, கோகிலா, வெங்கடேஸ், ஞானவடிவேல், செந்தில்வடிவேல், சுஜாதா ஆகியோர்கள் வாதி ஜெகதீஸனுக்கு 28.05.07ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளோம் என்றால்?
சரிதான்.

59. வா.சா.ஆ.7 28.05.07ம் தேதியிட்ட வாதி ஜெகதீஸன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் பக்கம் 6ல் வா.சா.ஆ,1 06.12.1930ம் தேதியிட்ட கிரைய பத்திரமும், வா.சா.ஆ,2 14.12.1931ம் தேதியிட்ட கிரைய பத்திரமும் மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.5 25.07.1957ம் தேதியிட்ட பரிவர்த்தனை பத்திரம் காட்டப்படவில்லை என்றும் சொன்னால்?
சரிதான்.

60. வா.சா.ஆ.7 28.05.07ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் பக்கம் 14ல் பட்டா எண்.2182 காட்டப்பட்டுள்ளது என்றால்?
காட்டப்பட்டுள்ளது.

61. சர்வே எண்.334/6B, சர்வே எண். 334/6P பார்ட்டில் 4198 சதுரடியை பொறுத்து நான் செந்தில்வடிவேல், சுஜாதா ஆகியோருடன் சேர்ந்து எனது மகன் ஞானவடிவேலுக்கு 12.07.2017ம் தேதியிட்ட குடும்ப ஏற்பாட்டு பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளேன் என்றால்?
சரிதான்.

62. மேற்படி சர்வே எண்.334/6B, சர்வே எண். 334/6P பார்ட்டில் 4198 சதுரடியை பொறுத்து மேற்படி ஞானவடிவேல், தவக்கல் உசேன் என்பவருக்கு 14.09.2017ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால்?
சரிதான்.

63. பட்டா எண்.1515 சர்வே எண்.334/6ல் கண்ட 1 ஏக்கர் 89 செண்ட் நிலத்திற்கு 1ம் பிரதிவாதி பெரியசாமி பெயரிலும், வெள்ளைச்செருவக்கோனார் மனைவி மருதாயி அம்மாள் பெயரிலும், வெள்ளைச்செருவக்கோனார் மகன் செருவக்கோனார் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்றால்?

இல்லை.

64. மேற்சொன்னவாறு மேற்படி 3 நபர்கள் பெயரிலும் மேற்படி சொத்திற்கு கூட்டு பட்டாவாக இருந்தது என்றும், வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்?

சரியல்ல.

65. பட்டா எண்.2182 பாலசுப்பிரமணி, காசிலிங்கம், நந்தகோபால், தனம், மஞ்சுளா மற்றும் எனது பெயரில் கூட்டாக ஏற்படுவதற்கு முன்னால் 1ம் பிரதிவாதி பெரியசாமி எங்களுக்கு வா.சா.ஆ,6 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால்?

வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு மு.வெள்ளைச்செருவக்கோனார் மனைவி மருதாயி அம்மாள் பெயரிலும், வெள்ளைமுத்து கோனார் மகன் செருவக்கோனார் மகன் முருகேசன் பெயரிலும் பட்டா ஏற்பட்டிருந்தது.

66. மேற்படி மருதாயி அம்மாள் பெயரிலும், முருகேசன் பெயரிலும் ஏற்பட்ட பட்டா எண் என்ன?

பட்டா எண்.1515 ஆகும்.

67. 1ம் பிரதிவாதி பெரியசாமி 03.05.2007ல் அனுப்பிய வா.சா.ஆ,6 வழக்கறிஞர் அறிவிப்புக்கு பின்பு தான் பட்டா எண்.2182 மேற்சொன்ன பாலசுப்பிரமணி, காசிலிங்கம், நந்தகோபால், தனம், மஞ்சுளா மற்றும் எனது பெயரிலும் சேர்ந்து கூட்டாக ஏற்பட்டது என்று சொன்னால்?

சரியல்ல.

68. வா.சா.ஆ,6 வழக்கறிஞர் அறிவிப்புக்கு பின்னிட்டு தான் மேற்படி 6 நபர்கள் பெயரிலும் பட்டா எண்.2182ன் படி பட்டா ஏற்பட்டது என்றும், தற்சமயம் அவ்வாறு இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்?

சரியல்ல.

69. பட்டா எண்.2182 நாங்கள் வாதிக்கு வா.சா.ஆ,7 28.05.2007ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தை எழுதி கொடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு தான் ஏற்பட்டது என்றால்?

சரியல்ல.

70. ஏற்கனவே தாவா சொத்து உள்ளிட்ட சர்வே எண்.334.∵.6ல் கட்டுப்பட்ட மொத்தம் 1 ஏக்கர் 89 செண்ட் சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெரியசாமி பெயரிலும் மருதாயி அம்மாள் பெயரிலும், வெள்ளைமுத்துக்கோனர் மகன் செருவக்கோனார் பெயரிலும் கூட்டாக இருந்தது என்றும், ஆனால் 1ம் பிரதிவாதி பெரியசாமிக்கு எந்தவித அறிவிப்பும் கொடுக்காமல் எந்தவித விசாரணையும் இன்றி எனது செல்வாக்கை பயன்படுத்தி வா.சா.ஆ,12யை பெற்றுக்கொண்டோம் என்றும், அதனால் வா.சா.ஆ.12 சட்டப்படி செல்லாது என்றும் சொன்னால்?

சரியல்ல.

71. வா.சா.ஆ.13 பட்டாவும், 1ம் பிரதிவாதி பெரியசாமிக்கு எவ்வித அறிவிப்பும் கொடுக்காமலும், எவ்வித விசாரணையும் செய்யாமலும், எங்களது செல்வாக்கை பயன்படுத்தி பெற்றுக்கொண்ட ஆவணம் என்றும், அதனால் மேற்படி வா.சா.ஆ.13 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் சொன்னால்?

சரியல்ல.

72. வா.சா.ஆ.13 பட்டா ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது இல்லை என்றும், எனவே அதன்பேரில் பெறப்பட்ட வா.சா.ஆ,14 அடங்கல் ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால்?

சரியல்ல.

73. வா.சா.ஆ.14 அடங்கலுக்கு முன்னால் எங்கள் வகையறா பெயரில் எந்தவித அடங்கலும் ஏற்படவில்லை என்றால்?

பட்டா எண்.1515ன்படி இருந்தது.

74. எங்கள் வகையறா பெயரில் தாவா சொத்திற்கு எப்போதும் எந்தவித கிஸ்தியும் ஏற்படவில்லை என்றும், நாங்கள் கிஸ்தி செலுத்தவில்லை என்றும் சொன்னால்?

செலுத்தியுள்ளோம்.

75. அவ்வாறு செலுத்தியதாக சொல்லப்படும் கிஸ்தி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்?

தாக்கல் செய்துள்ளோம்.

76. கிஸ்து ரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்?

சரியல்ல.

77. தாவா சொத்திற்கான பட்டா எங்கள் பெயரில் ஏற்பட்டது சம்பந்தமாக தற்போது மதுரை மாவட்ட வருவாய் அலுவலரிடம் (DRO) வழக்கு விசாரணையில் இருக்கிறது என்றால் சரியா?

இல்லை

78. மேற்படி DRO நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், அதில் நானும் ஆஜராகியுள்ளேன் என்றும், வழக்கிற்காக அவ்வாறு இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்?

சரியல்ல.

79. வாதி ஜெகதீசன் மீதும் எங்கள் வகையறா மீதும் 1ம் பிரதிவாதி பெரியசாமி தாக்கல் செய்த தனிநபர் வழக்கு வாடிப்பட்டி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால்?

சரிதான்.

80. பிரதிவாதிகள் பெரியசாமி வகையறா தாவா சொத்தினை சுற்றி வேலி அமைத்து ஆஸ்பெட்டாஸ் செட் அமைத்து தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால்?

சரியல்ல.

81. பிரதிவாதிகள் பெரியசாமி வகையறா தாவா சொத்தில் தற்போது மின் இணைப்பு பெற்று 2 போர்வெல் அமைத்துள்ளார்கள் என்றால்?
சரிதான். ஆனால் அதற்கு நாங்கள் ஆட்சேபணை செய்து தகராறு செய்து வருகிறோம்.

82. செருவக்கோனார் என்ற பெயர் ஒன்றாக இருப்பதை சாதகமாக பயன்படுத்தி கொண்டு நாஙகள் பட்டாவை தவறுதலாக பெற்று தாவா சொத்தின்மீது உண்மைக்கு புறம்பாக உரிமை கொண்டாடுகிறோம் என்றால்?
சரியல்ல.

83. முத்துச்சாமிகோனர் மகன் வெள்ளைச்செருவக்கோனார் தாவா சொத்தினை எப்போதும் கிரையம் வாங்கவில்லை என்று சொன்னால்?
சரியல்ல.

84. தாவா சொத்தில் முத்துச்சாமிகோனர் மகன் வெள்ளைச்செருவக்கோனார் என்பவருக்கு எக்காலத்திலும் எவ்வித பாத்தியம் ஏற்படவில்லை என்று சொன்னால்?
சரியல்ல.

85. வா.சா.ஆ,5 பரிவர்த்தனை பத்திரத்தில் தாவா சொத்து கட்டுப்படவில்லை என்று சொன்னால்?
சரியல்ல.

86. வா.சா.ஆ,5 பரிவர்த்தனை பத்திரம் மூலம் எனது தகப்பனார் வெள்ளைமுத்துக்கோனார் மகன் செருவக்கோனாருக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் ஏற்படவில்லை என்றால்?
சரியல்ல.

87. தாவா சொத்தில் எனது தகப்பனார் எப்போதும் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்ததில்லை என்றால்?
சரியல்ல.

88. முத்துச்சாமிகோனார் மகன் வெள்ளை செருவக்கோனார் வாரிசுகளும், நாங்களும், எப்போதும் தாவா சொத்தில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்ததில்லை என்றும், எங்களுக்கு எந்தவித பாத்தியமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால்?
சரியல்ல.

89. வாசா.ஆ.7 கிரைய பத்திரம் எழுதி கொடுக்க எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும், வா.சா.ஆ.7 கிரைய பத்திரம் மூலமாக வாதிக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் ஏற்படவில்லை என்றும் சொன்னால்?
சரியல்ல.

90. வா.சா.ஆ,7 கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாத ஆவணம் எனறும், வா.சா,ஆ7 ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால்?
சரியல்ல.

91. தாவா சொத்தில் வாதி எப்போதும் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்ததில்லை என்றும் சொன்னால்?
சரியல்ல.

92. 1983ல் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு கிடைத்தது என்றும், அது முதல் தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளார் என்று சொன்னால்?
சரியல்ல

93. 1ம் பிரதிவாதி இறந்த பின்பு 2 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்தினை முழுமையாக அடைந்து முழு உரிமைதாராகளாக தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறார்கள் என்றால்?
சரியல்ல.

94. எனது நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்து குறித்து உண்மைக்கு புறம்பான விபரங்களை சொல்லியுள்ளேன் என்று சொன்னால்?
சரியல்ல.

95. தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லாமல், எழுதிகொடுக்கப்பட்ட வா.சா.ஆ.7 ஆவணத்தை வைத்து வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக எந்தவித நிவாரணமும் பெற தகுதி இல்லை என்றால்?
சரியல்ல.

96. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்?

சரியல்ல.

(ஓம்.). D. ராம்கணேஷ், எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி